நாள் 16.07.2025

இ.எண்.2/2024 இன் அசல் வழக்கு எண் 30/2024

வா சா 1 லெட்சுமி

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் சொல்லப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் மகனுக்கு தெரியும். அசல் வழக்கின் சொத்தை எனது கணவர் யாரிடம் இருந்து வாங்கினார் என்று எனக்கு தெரியாது என்றால் மரியான், வேலாயுதம், மாடத்தி ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்றது. என் கணவருக்கு கிரையம் கொடுத்த நபர்கள் தாவா சொத்து தீர்வை ரசீது மூலம் அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்று கூறியுள்ளது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

என்னிடம் காட்டப்படும் பிராதில் தாவா சொத்து வேலாயுதம் த/பெ.சுப்பிரமணியன், ஆறுமுகம் த/பெ.புதியவன் குடும்பம், மாடத்தி க/பெ.மணி ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு வழக்கு விவரம் எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. பிரதான வழக்கும், மனுவும் எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் நிலத்திற்காக தாக்கல் செய்துள்ளேன். என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எங்கள் நிலத்தை பொறுத்து பிரதிவாதிகள் ஆவணங்கள் ஏற்படுததியுள்ளதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

வழக்கு பரிகாரம் என்ன என்று குறிப்பாக கேட்டால் எனக்கு தெரியாது. அதேபோல் மனுவிலும் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால

எனக்கு தெரியாது. தாவா சொத்தின் புல எண் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கபடுகிறது.

MANJULA C

Digitally signed by MANJULA C
Date: 2025.07.18 11:37:21 +0530